NATIONAL SENIOR CERTIFICATE EXAMINATION
NOVEMBER 2009

# TAMIL HOME LANGUAGE: PAPER I

Time: 2 hours | Marks: 70

---

**PLEASE READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY**

1. This paper consists of 8 pages.
2. Read the instructions to each question carefully.
3. Answer all questions.
4. All answers must be in **TAMIL**.

---

IEB Copyright © 2009

**SECTION A**

**பகுதி ஒன்று**

1. **கீழ்காணும் கதையைக் கவனமாகப் படித்துப் பின்வரும்**

## 7. கடலில் வீசிய புயல்

முன்னொரு காலத்தில் இந்தோனீசியாவில் 'கமிடி' என்ற மீனவன் வாழ்ந்து வந்தான். அவன் மிகவும் தைரியசாலி. அவன் ஆழ்கடலுக்குச் சென்று மீன் பிடிப்பான். ஒவ்வொரு முறையும் அவன் கரைக்குத் திரும்பும்போது படகு நிறைய மீன்களைப் பிடித்து வருவது வழக்கம்.

ஒரு நாள் காலை வழக்கம் போல அவன் மீன் பிடிக்கச் சென்றான். படகு நடுக்கடலில் சென்றுகொண்டிருந்தது. இதுவரை இதமாய் இருந்த பருவநிலை திடீரென மாறத்தொடங்கியது. பலத்த காற்று வீசியது.

வானமெங்கும் கார்மேகங்கள் சூழ்ந்தன. தூரத்தில் இடி முழக்கம் கேட்டது. மின்னல் பளிச் பளிச்செென மின்னியது. கனத்த மழையும் பெய்யத் தொடங்கியது. கடல் கொந்தளிக்க ஆரம்பித்தது. பெரிய அலைகளால் கமிடியின் படகு அங்குமிங்கும் தத்தளித்தது. கமிடியின் மனம் பயத்தினால் பதைபதைத்தது. அவ்வேளை கடலில் எழுந்த பேரலை ஒன்று படகை எங்கோ அடித்துச் சென்றது.



நீண்ட நேரத்திற்குப் பிறகு புயல் காற்றின் சீற்றம் ஒருவாறு அடங்கியது. கமிடி கண் விழித்துப் பார்த்தான். தான் ஒரு தீவின் கரையில் ஒதுங்கிக் கிடப்பதை அறிந்தான். அப்போதுதான் அவனுக்குத் தான் புயலில் சிக்கியது நினைவுக்கு வந்தது. கமிடி மெதுவாக எழுந்தான். அந்தத் தீவின் நடுவே இருந்த சுமார் பதினைந்து குடிசைகளைக் கண்டான். அவற்றுள் மிகவும் பெரியதாகக் காணப்பட்ட ஒரு குடிசையை நோக்கிச் சென்றான். அந்தக் குடிசைக்குள் மெல்ல எட்டிப் பார்த்தான். அந்தக் குடிசையில் சில உருவங்கள் நடமாடுவதைக் கண்டான். அங்கு அவன் கண்ட காட்சி அவனை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

IEB Copyright © 2009

1.1 விடுபட்ட இடங்களில் சரியான சொற்களை எழுதுக:

1.1.1 அவன் ஆழ்கடலுக்குச் சென்று ------------------------------ பிடிப்பான். (1)

1.1.2 ------------------------------ நடுகடலில் சென்றுகொண்டிருந்தது. (1)

1.1.3 கனத்த ---------------------- பெய்யத் தொடங்கியது. (1)

1.1.4 கமிடி -------------------------- விழித்துப் பார்த்தது. (1)

1.1.5 அந்தக் ------------------------------ மெல்ல எட்டிப் பார்த்தான். (1)

**[5]**

1.2 சரியான விடை எழுதுக:

1.2.1 கதையின் படி முன்னொரு காலத்தில் யார் வாழ்ந்து வந்தான்? (2)

1.2.2 அவன் கரைக்குத் திரும்பும் போது என்ன கொண்டு வருவான்? (2)

1.2.3 தூரத்தில் என்ன கேட்டது ? (2)

1.2.4 கமிடி கண் விழித்துப் பார்க்கும்போது எங்கே ஒதுங்கிக் இருந்ததை அறிந்தான்? (2)

1.2.5 அந்த தீவின் நடுவே எத்தனை குடிசைகளைக் கண்டான் ? (2)

**[10]**

1.3 <u>உண்மை</u> அல்லது <u>உண்மை அல்ல</u> என்று எழுதுக:

1.3.1 கமிடி [அவன்] மிகவும் தைரியசாலை. (1)

1.3.2 கன மழை பெய்யவில்லை. (1)

1.3.3 பெரிய அலைகளால் கமிடியின் படகு அங்கும் இங்கும் தத்தளித்தது. (1)

1.3.4 நீண்டநேரத்தில் புயல் காற்றின் சீற்றம் ஒருவாறு அடங்கியது. (1)

1.3.5 குடிசைக்குள் அவன் எட்டிப் பார்க்கவில்லை. (1)

**[5]**

IEB Copyright © 2009 

1.4 கீழ்வரும் சொற்களை வரிசைப் படுத்தி முறையாக

வாக்கியங்கள் எழுதுக:

உம் : அங்கே போ நீ
நீ அங்கே போ

1.4.1 மிகவும் அவன் தைரியசாலி. (2)

1.4.2 காற்று வீசியது பலத்த (2)

1.4.3 கொந்தளிக்க கடல் ஆரம்பித்தது. (2)

1.4.4 கமிடி எழுந்தான் மெதுவாக. (2)
**[8]**

1.5 கீழ்வரும் சொற்களை திருத்தி எழுதுக:

உம்: டகல் = கடல்

1.5.1 மீவன்ன ------------------------------ (1)

1.5.2 டிசைகுல்யி ---------------------------- (1)
**[2]**

**30 marks**

IEB Copyright © 2009

## SECTION B

## பகுதி இரண்டு

2. **கீழ்வரும் பகுதியை சுமார் 15 - 20 சொற்களில் சுருக்கி எழுதுக:**

நாம் ஒருவரைச் சந்திக்கும்போது அவருடன் கை குலுக்கி வணக்கம் கூறுகிறோம். இச்செய்கை நமது நட்பின் அடையாளமாக விளங்குகிறது. ஜப்பான் நாட்டு மக்களிடையே பிறரை மதித்து மரியாதை செலுத்தும் பண்பு இயல்பாய்க் காணப்படுகிறது. அவர்கள் வீட்டில் அல்லது பணிமனையில் ஒருவரைச் சந்திக்கும்போது நன்றாகத் தலை குனிந்து தங்களின் அன்பு கலந்த மரியாதையைத் தெரிவிக்கின்றனர். சாலை ஓரங்களில் தம் நண்பர்களைச் சந்திக்க நேர்ந்தால் பலமுறை அவர்கள் தலை குனிந்து வணக்கம் கூறுவர்.

**10 marks**

IEB Copyright © 2009

## SECTION C

பகுதி மூன்று

3. கீழ்வரும் பகுதியை நன்றாகப் படித்து பின்வரும் கேள்விகளுக்கு பதில் தருக:

ஒரு சனிக்கிழமை நான் என் வீட்டிற்கு அருகில் உள்ள சமூக மன்றத்திற்குச் சென்றேன். அங்குப் பொதுமக்களுக்கான குடிமைத் தற்காப்புப் பயிற்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது குடிமைத் தற்காப்புப் படையின் 'கேப்டன்' தினகரன் பேசினார். பேரிடர் ஏற்படும் அவசரக் காலத்தில் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளப் பொதுமக்களுக்கு உதவி செய்வதே தங்களின் முக்கியப் பணி என்று அவர் கூறினார். அதன்பின்பு அப்படையின் அதிகாரி ராஜ், பேரிடரில் காயமடைந்தவர்களுக்கு முதலுதவி செய்வது எப்படி என்பதைப்பற்றி விளக்கினார். கை, கால் முறிந்தவர்களுக்குக் கட்டுப்போடுவது,

பயிற்சியின் இறுதிக் கட்டமாகப் பல வேடிக்கை விளையாட்டுகளும் நடத்தப்பட்டன. அந்த விளையாட்டுகளில் நானும் ஆர்வத்துடன் பங்கேற்றேன்.

3.1 சரியான விடைகள் எழுதுக:

3.1.1 பெயர் சொல் என்றால் என்ன ? (1)

3.1.2 மேற்காணும் பகுதியிலிருந்து நான்கு பெயர்ச் சொற்கள் எழுதுக: (3)

**[4]**

3.2 கீழ்வரும் சொற்களை வரிசைப் படுத்தி முறையான வாக்கியங்கள் எழுதுக:

உம்: அவன் நல்ல பிள்ளை ஒரு
அவன் ஒரு நல்ல பிள்ளை.

3.2.1 அதிகாரி ராஜ் அப்படையின் . (2)

3.2.2 முக்கிப்பணி அது ஒரு என்று கூறினார். (2)

**[4]**

3.3 சரியாக எழுதுக:

உம்: சக்னிழகிமை = சனிக்கிழமை

3.3.1 வீ டிட்குற் (1)
3.3.2 யிபசிற் (1)
3.3.3 வி உத (1)
3.3.4 அகாரிதி (1)

**[4]**

IEB Copyright © 2009

3.4 கீழ்வரும் சொற்களுக்கு எதிர்ச்சொற்கள் எழுதுக:

3.4.1 இங்கே ---------------------------------------------------------- (1)

3.4.2 முன் ---------------------------------------------------------- (1)

3.4.3 வா ---------------------------------------------------------- (1)

3.4.4 பகல் ---------------------------------------------------------- (1)

3.4.5 சிறிய ---------------------------------------------------------- (1)

**[5]**

3.5 முன்வரும் படத்தின் அடிபடையில் வரும் கேள்விகளுக்கு

பதில் தருக:



<u>ஒருமைக்குப் பன்மை தருக:</u>

உம்: செடி = செடிகள்

3.5.1 வழி ---------------------------------------------- (1)

3.5.2 மரம் ---------------------------------------------- (1)

3.5.3 பூ ---------------------------------------------- (1)

**[3]**

IEB Copyright © 2009

3.6 ஆண்பாலக்குப் பெண்பால் தருக:

3.6.1 ஆண் ------------------------------------------------ (1)

3.6.2 மகன் ------------------------------------------------ (1)

3.6.3 சிறுவன் ------------------------------------------- (1)

**[3]**

3.7 சேர்த்து எழுதுக:

உம்: பெரிய + பெட்டி
பெரியப்பெட்டி

3.7.1 அவனை + பார் ------------------------------------------- (1)

3.7.2 இரண்டு + ஆயிரம் ---------------------------------------- (2)

**[3]**

3.8 பிரித்து எழுதுக:

3.8.1 இங்கேப்பார் ------------------------------------------------- (1)

3.8.2 அதைச்சொல் ---------------------------------------------- (1)

**[2]**

3.9 கீழ்வரும் எழுத்துகளை சரியான வரிசையில் எழுதுக:

க ஆ இ அ ஊ ஈ உ கா ஐ ஏ எ ஔ ஓ ஒ (2)

**30 marks**

**Total: 70 marks**

IEB Copyright © 2009